# கணிதச்சிறகுகள்

## வெளியீடு : 01

**தரம் 11 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டம்**

**2020**

வெளியீடு
கணிதப் பிரிவு
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

அனுசரணை : SJC 87 Initiative

kalvi.lk

# பங்குகள்

01. பங்கொன்றிற்கு ரூ 6 வழங்கும் கம்பனியொன்றில் பங்குரிமையுள்ள ஒருவர் ஓராண்டின் பின் ரூ 15000 ஐ பங்குலாபமாகப் பெறுகிறார் எனின், அவரிடமுள்ள பங்குகளின் எண்ணிக்கை யாது?

02. ரூ 12 உடைய பங்குகளை கொள்வனவு செய்ய கம்பனியொன்றில் குறித்த தொகையை முதலீடு செய்யும் ஒருவர் பங்குலாபமாக வருட இறுதியில் ரூ 240 ஐ பெறுகிறார் அது அவரது முதலீட்டின் 4% எனின் அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?

03. நபரொருவர் சந்தை விலை ரூ 25 ஆன 1000 பங்குகளை கொள்வனவு செய்து ஒரு வருடத்தின் பின்னர் ஒரு பங்கு ரூ 40 வீதம் விற்பனை செய்கின்றார் எனின் அவர் பெறும் மூலதன இலாபத்தைக் காண்க.

Education கல்வி අධ්‍යාපන

04. கம்பனி யொன்றில் 500 பங்குகளில் உரிமையுள்ள ஒருவர் ஓராண்டின் இறுதியில் ரூ 5000 ஐ பங்குலாபமாகப் பெறுகின்றார் எனின் பங்கொன்றிக்கு கம்பனி வழங்கிய பங்குலாபம் எவ்வளவு?

05. ஒருவர் தன்னிடமுள்ள பங்குகளை ரூ 80000 இற்கு விற்பதன் மூலம் ரூ 10000 ஐ மூலதன இலாபமாகப் பெற்றார் எனின் அவர் கம்பனியில் முதலீடு செய்த மொத்தப் பணம் எவ்வளவு?



kalvi.lk

06. சந்தை விலை 10 ரூ ஆகவுள்ள பங்குகளைக் கொள்வனவு செய்யும் ஒருவர் முதலீடு செய்த தொகை ரூ 30000.00 ஆகும். அவர் கொள்வளவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?

07. பங்கொன்றின் சந்தைவிலை ரூ 25.00 ஆகவுள்ள பங்குகளை கொள்வனவு செய்வதற்காக 75000.00 ரூபாவை முதலீடு செய்கிறார். 27 ரூபா ஆகும் போது பங்குகள் அனைத்தையும் விற்பனை செய்கிறார் எனின் அவருக்குக் கிடைக்கும் இலாபம் யாது?

08. ஒருவர் தன்னிடம் 50000.00 ரூபா தொகையில் 2/5 பங்கை சந்தை விலை ரூ 20.00 ஆகவுள்ள பங்குகளை கொள்வனவு செய்கிறார் எனின் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

Education கல்வி

09. பங்கொன்றிற்கு 2.00 ரூபா பங்குலாபம் வழங்கப்படும். சந்தை விலை ரூ 15.00 ஆகவுள்ள பங்குகளை கொள்வனவு செய்த ஒருவருக்கு வருட முடிவில் பங்குலாபமாக 2000.00 ரூபா கிடைத்தது எனின் அவர் முதலிட்ட தொகையைக் காண்க.

10. கம்பனி ஒன்றில் ஒவ்வொன்றும் 10.00 ரூபா சந்தைப் பெறுமானம் உள்ள 500000 பங்குகளைக் கொண்டுள்ளது. அக் கம்பனியில் A என்பவர் 1000 பங்குகளை கொள்வனவு செய்கின்றார் எனின் அவரது உரிமைச் சதவீதத்தைக் காண்க.



kalvi.lk

01. பங்கொன்றின் விலை ரூ 12 ஆகவுள்ள கம்பனி ஒன்றில் ஒருவர் ரூ 24000 ஐ முதலீடு செய்கின்றார்.

1. அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?
2. கம்பனி பங்கொன்றிக்கு ரூ 3 இனை பங்குலாபமாக வழங்குகிறது எனின் அவருக்கு கிடைக்கும் பங்கு இலாபத்தைக் காண்க.
3. பங்கின் சந்தை விலை ரூ 15 ஆக உயர்ந்தது எனின் அவருக்கு கிடைக்கும் மூலதன இலாபத்தைக் காண்க.
4. அவர் பங்குகளை மேற்குறித்த சந்தை விலைக்கு விற்றார் எனின் அவருக்கு கிடைத்த பங்கு இலாபத்தையும், மூலதன இலாபத்தையும் முதலீட்டின் சதவீதமாகத் தருக.

02. குறித்த கம்பனி ஒன்றில் பங்கொன்றின் விலை ரூ 20 ஆகும். கம்பனியானது வருடமொன்றிற்கு ஒரு பங்கிற்கு ரூ 2 பங்குலாபத்தை வழங்குகின்றது சமீர் இக் கம்பனியில் பங்குகளை வாங்குவதற்கு ரூ 30 000 இனை முதலீடு செய்தார்.

1. சமீர்க்கு கிடைக்கும் பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.
2. சமீர் கிடைத்த பங்குகளுக்காக ஒரு வருடத்தில் கிடைக்கும் பங்குலாபம் எவ்வளவு?
3. இக் கம்பனியின் பங்குகளை வைத்திருக்கும் சமீருக்கு ஒரு வருடத்தின் பின்னர் பங்கு இலாபமாக ரூ 1800 கிடைக்கின்றது எனின் அவர் இக் கம்பனியில் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை யாது?
4. சமீர் இக் கம்பனியில் முதலீடு செய்த பணம் எவ்வளவு?

03. ரஞ்சித் என்பவர் கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூ 40000 ஐ முதலீடு செய்கிறார். அக் கம்பனியின் பங்கொன்றின் சந்தை விலை ரூ 40 ஆக இருந்தது.

1. அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?
2. பங்கொன்றிற்குக் கிடைக்கும் ஆண்டு பங்குலாபம் ரூ 4 எனின் அவருடைய ஆண்டு வருமானம் எவ்வளவு?
3. இரண்டாவது வருடத்தில் பங்குகளினால் கிடைத்த ஆண்டு வருமானம், முதல் வருட ஆண்டு வருமானத்தை விட 50% இனால் கூடியது எனின் இரண்டாவது வருடம் கிடைத்த பங்குலாபம் எவ்வளவு?
4. இரண்டாவது வருடம் பங்கொன்றுக்கு கிடைக்கும் பங்குலாபம் எவ்வளவு?

04. பங்கொன்றின் விலை ரூ 500 ஆகவுள்ள கம்பனியில் 100 பங்குகளுக்கு மேல் கொள்வனவு செய்யும் போது பங்கு ஒன்றிற்கு ரூ 50 ஐ பங்குலாபமாகவும், 100 பங்குகளுக்கு குறைவாக கொள்வனவு செய்யும் போது பங்கொன்றிற்கு ரூ 40 ஐ பங்குலாபமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

1. A என்பவர் 150 பங்குகளைக் கொள்வளவு செய்யும் போது பெற்றுக் கொள்ளும் ஆண்டு வருமானத்தைக் காண்க.

2. B என்பவர் அதே கம்பனியில் ரூ 30000 ஐ முதலீடு செய்கிறார் எனின் அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

3. B பெற்ற பங்குலாபம் எவ்வளவு?

4. வருட முடிவில் A உம் B உம் தம்மிடமுள்ள எல்லா பங்குகளையும் A ரூ 550 இற்கும் B ரூ 600 இற்கும் விற்பனை செய்தனர் எனின் A, B பெறும் மூலதன இலாபங்களைக் காண்க.

Education கல்வி அத்யாபன

05. விமலன் பங்கொன்றின் சந்தை விலை ரூ 10 ஆகவுள்ள கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்ய ரூ 25000 ஐ முதலீடு செய்கின்றார். கம்பனி பங்கொன்றிற்கு ரூ 4 ஐ பங்குலாபமாக வழங்குகின்றது.

1. விமலன் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?

2. ஒரு வருட முடிவில் விமலன் பெற்ற பங்குலாபம் எவ்வளவு?

3. வருட இறுதியில் எல்லா பங்குகளையும் விற்பனை செய்ய விரும்பியவர் தனக்கு நட்டம் ஏற்படாதிருக்க இம் முதலீட்டில் பங்கொன்றை விற்க வேண்டிய மிகக் குறைந்த விலை யாது?

4. கம்பனியின் சந்தை விலைக்கே தனது பங்குகளை விற்பனை செய்வதால் இம் முதலீட்டின் வருட இறுதியில் அவர் அடையும் நட்டம் எவ்வளவு?



kalvi.lk

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page